# INTERNATIONAL INDIAN SCHOOL – RIYADH

## S.A.2 TAMIL WORK SHEET - 2016 – 2017

## STANDARD VII

# ஏர்முனை

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடத்தை நிரப்புக.
   - அ) நிகரற்ற தொழில் ____________.
   - ஆ) உழவர்கள் செல்வமாகக் கருதுவது ____________.

2. பிரித்து எழுதுக.
   - அ) நேரிங்கே ____________.
   - ஆ) சேமமுற ____________.
   - இ) தேசமெல்லாம் ____________.
   - ஈ) பருவப்பெண் ____________.

ஆ) குறுவினாக்கள்

1. முத்து முத்தான வியர்வைக்குக் கிடைத்த பயன் என்ன ?
2. உழவர் நெல்லை எவ்வாறு வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்க்கின்றனர் ?
3. விளைந்த நெற்கதிரைக் கவிஞர் எவ்வாறு உவமிக்கிறார் ?

இ) சிறுவினா

கவிஞர் மருதகாசி, உழவரின் செயல்களாகக் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

# உழவின் சிறப்பு

## பொருள்தருக

மேழி – கலப்பை, ஏர்; வேந்தர் – மன்னர்; ஆழி – மோதிரம்; சூழ்வினை – உண்டாகும் வறுமைத் துன்பம்; காராளர் – மேகத்தை ஆளுகின்றவர்களாகிய உழவர்.

உரிய விடையைத் தேர்வு செய்க.

1. வேந்தர் என்பதன் பொருள்

அ. அமைச்சர் ஆ. வள்ளல் இ. மன்னர்

2. ஆழி என்பதன் பொருள்

அ. சிலம்பு ஆ. தோடு இ. மோதிரம்

குறுவினா

கம்பர் இயற்றிய நூல்கள் யாவை?

சிறுவினா

உழவனின் கைகளைக் கம்பர் எவ்வாறு சிறப்பித்துக் கூறுகிறார் ?

## இயற்கை வேளாண்மை

1. உரிய விடையைத் தெரிவு செய்க.

அ. வேளாண் பல்கலைக்கழகம் உள்ள இடம் ______________.

1. மதுரை 2. சென்னை 3. கோவை

ஆ. வேளாண்தொழிலில் உள்ள கூறுகள் ______________.

1. இரண்டு 2. நான்கு 3. ஆறு

இ. வானம் பார்த்த பூமி என்பது

1. நன்செய் 2. புன்செய் 3. பொன்செய்

ஈ. கேட்காத கடனும் பார்க்காத பயிரும் ______________.

1. பாழ் 2. பால் 3. பாள்

பஞ்சகவ்வியம் என்பது ______________ பொருள்களால் ஆனது.

1. மூன்று　　2. நான்கு　　3. ஐந்து

பொருத்துக.

அ. நெல் – வண்டியோட

ஆ. கரும்பு – நண்டோட

இ. வாழை – தேரோட

ஈ. தென்னை – ஏரோட

குறுவினாக்கள்

1. உரங்களையும் பூச்சிக்கொல்லிகளையும் ஏன் பயன்படுத்துதல் கூடாது?
2. நிலத்தை எவ்வாறு உழுதல் வேண்டும்?
3. பயிர்களுக்கு இடைவெளி எவ்வளவு விடுதல் வேண்டும்?
4. தொழு உரம் என்றால் என்ன?
5. விதைப்பதற்குரிய காலம் சுட்டும் பழமொழிகளை எழுதுக.

சிறுவினாக்கள்

1. மண்ணை எவ்வாறு பண்படுத்துதல் வேண்டும்?
2. பஞ்சகவ்வியம் ஆக்குவது எப்படி?
3. பயிர்க்காப்புச் செய்வது எவ்வாறு?
4. அங்கக வேளாண்மை என்றால் என்ன?

# வேற்றுமை

## கோடிட்ட இடத்தை நிரப்பு:

1. அமுதா ____________________ எழுதினாள்.

   அ. பாடத்தை    ஆ. பாடத்திற்கு    இ. பாடத்தின்

2. முருகன் ____________________ உயர்ந்தான்.

   அ. உழைப்பை    ஆ. உழைப்பால்    இ. உழைப்பிற்கு

3. பண்டைய மன்னர்கள் தமிழ் ____________________ பாடுபட்டனர்.

   அ. வளர்ச்சிக்கு    ஆ. வளர்ச்சியை    இ. வளர்ச்சியின்கண்

அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ள சொல்லுடன் பொருத்தமான வேற்றுமை உருபை இணைத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. கலைச்செல்வன் __________ முரித்தான். (கிளை)
2. பாடம் __________ படிக்கப்பட்டது. (இராமன்)
3. பாடல் எழுதிய __________ பரிசு கிடைத்தது. (புலவர்)
4. இது __________ சட்டை. (கபிலன்)
5. __________ இலக்குமி பாடுகிறாள். (மேடை)

குறுவினாக்கள்

1. வேற்றுமை என்பது யாது ?
2. வேற்றுமை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
3. மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாவை ?
4. உருபின்றி வரும் வேற்றுமைகள் யாவை ? விளக்குக.

# அடைமொழி

குறுவினாக்கள்

1. அடைமொழி என்றால் என்ன ?
2. இனமுள்ள அடைமொழிக்குச் சான்றுகள் தருக.
3. இனமில்லா அடைமொழிக்குச் சான்றுகள் தருக.

கீழுள்ள தொடர்களை இனமுள்ள அடைமொழி, இனமில்லா அடைமொழியெனப் பகுத்துக் காட்டுக.

1. செந்தாமரை
2. பாற்குடம்
3. உப்பளம்
4. பூமரம்
5. ஊர்மன்றம்
6. தோய்தயிர்
7. செஞ்ஞாயிறு
8. வெள்ளைப்பூனை
9. செந்தமிழ்

# மூவகைப் போலிகள்

கொடுக்கப்பட்டுள்ள சொற்களுக்கான போலிகளை எழுதுக.

1. கலம் – 2. இலஞ்சி – 3. குடல் –

குறுவினாக்கள்

1. போலி என்றால் என்ன ?
2. போலி எத்தனை வகைப்படும் ?
3. இறுதிப்போலியை விளக்குக.
4. நலன், ஆனை, அரையர் – இவை எவ்வகைப் போலிகளுக்கு எடுத்துக்காட்டுகள் ?

# எங்கள் தமிழ்

## பொருள்தருக

கதி – துணை; பேறு – செல்வம்; நனி – மிகுதி ( மிக்க ); தரம் – தகுதி; புவி – உலகம்.

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

   அ.தமிழ் எங்கள் ________.

   ஆ. இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல ________.

2. பொருள் தருக.

   கதி, பேறு, நனி.

ஆ. குறுவினா

பாரதிதாசன் – குறிப்பு எழுதுக.

இ. சிறுவினா

தமிழின் சிறப்பைப் பாரதிதாசன் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?

# ஓவியக்கலை

## கோடிட்ட இடத்தை நிரப்பு

1. சங்ககாலத்தில் ஓவியங்களை ________________ என அழைத்தனர்.
2. தொல்காப்பியம் ________________ வணக்கம் பற்றிக் கூறுகிறது.
3. இறை நடனம் புரிவதற்கு ஏற்படுத்தப்பட்டது ________________ சபை.
4. கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதனை ________________ என்றழைத்தனர்.
5. சித்திரக்காரப் புலி என அழைக்கப்பட்டவன் ________________.

குறுவினாக்கள்

1. ஓவியக்கலை எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டது ?
2. கோட்டோவியங்கள் என்றால் என்ன ?
3. வரைகருவிகள் எவையெவை ?
4. சோழர்கால ஓவியங்கள் எங்குக் காணப்படுகின்றன ?
5. நாயக்கர் கால ஓவியங்கள் எங்கெங்கு உள்ளன ?

சிறுவினாக்கள்

1. பழங்கால ஓவியங்களாகக் கண்டெடுக்கப்பட்டவை எவை ?
2. ஓவிய வரைவிடங்களாகத் திகழ்ந்தவை எவை ?
3. தமிழருக்கே உரிய ஓவிய மரபுகளை எவ்வாறு கண்டறிவது ?